
தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்
TNPSC
GROUP 2 AND GROUP 4
SPECIAL
By ANANDHAVELAN G.
TNPSC

# தமிழ்

ஐங்குறுநூற்றில் முல்லைத் திணைப் பாடல்களைப் பாடியவரின் பெயரைத் தேர்ந்தெடு

(A) பேயனார்
(B) கபிலர்
(C) ஓதலாந்தையார்
(D) ஓரம்போகியார்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

கீழே காணப்பெறுவனவற்றில் எவை சரியற்றவை என்று கூறுக.

I. அகப்பொருள் பற்றிய, 'நற்றிணை' நூலில், புறப்பொருள் செய்திகளும், தமிழக வரலாற்றுக்குறிப்புகளும் அறவே இடம் பெற்றிராதது குறிக்கத்தக்கது

II. நற்றிணைச் செய்யுட்கள் எட்டடிச் சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையும் கொண்டவை

III. நற்றிணைச் செய்யுட்கள் அகவற்பாவால் ஆனவை

IV. நற்றிணையைத் தொகுப்பித்தவன் பன்னாடு தந்த மாறன் வழுதி என்னும் பாண்டிய மன்னன் ஆவான்

(A) I மற்றும் III சரியற்றவை (B) II மற்றும் IV சரியற்றவை

(C) III மற்றும் IV சரியற்றவை (D) I மற்றும் II சரியற்றவை

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பொருந்தா இணையினைக் காண்க:

(A) களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் – புறநானூறு

(B) கடனே

(B) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் – திருக்குறள்

(C) கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழன் – சிலப்பதிகாரம்

(D) பண்ணொடு தமிழொப்பாய் – தேவாரம்

'திரிகடுகம்' பற்றிய கூற்றுகளில் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக

(A) திரிகடுகம் நூற்று இரண்டு வெண்பாக்களைக் கொண்டது
(B) திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார்
(C) திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று
(D) சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துக்குப் பெயர் திரிகடுகம்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பாந்தள், உரகம், பன்னகம், பணி என்னும் சொற்களின் பொருள் ———————— என்பதாகும்.

(A) கரடி (B) யானை (C) முதலை (D) பாம்பு

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பட்டியல் I-ஐயும் II-ஐயும் பொருத்தி, கீழ்க்காணும் தொகுப்பிலிருந்து உரிய விடையைத் தேர்ந்து எழுதுக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) 'பாடு' எனக் கூறியவுடன் பாடுபவர் | 1. சித்திரகவி |
| (b) ஓசைநலம் சிறக்கப் பாடுபவர் | 2. வித்தாரக்கவி |
| (c) தொடர் நிலைச் செய்யுள் பாடுபவர் | 3. ஆசுகவி |
| (d) சொல்லணி அமைத்துப் பாடுபவர் | 4. மதுரகவி |

(A) 3 4 2 1 (B) 4 3 1 2 (C) 2 1 4 3 (D) 3 2 1 4

இந்தியா, விஜயா என்ற இதழ்களை வெளியிட்டவர்

(A) பாரதிதாசன் (B) பாரதியார்

(C) திரு.வி.க. (D) முடியரசன்

பட்டியல் I-ல் உள்ள மூலிகையின் பொதுப்பெயரையும் பட்டியல் II-ல் உள்ள சிறப்புப்பெயரையும் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:

| பட்டியல் I<br>மூலிகையின் பொதுப்பெயர் | பட்டியல் II<br>சிறப்புப்பெயர் |
| --- | --- |
| (a) தூதுவளை | 1. குமரி |
| (b) கற்றாழை | 2. ஞானப் பச்சிலை |
| (c) கரிசலாங்கண்ணி | 3. இந்திய மருந்து |
| (d) குறுமிளகு | 4. தேகராசம் |

(A) 4 3 1 2 (B) 3 4 2 1 (C) 1 2 3 4 (D) 2 1 4 3

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

வரிசை ஒன்றுடன் வரிசை இரண்டினைப் பொருத்தி வரிசைகளுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:

| வரிசை ஒன்று | வரிசை இரண்டு |
|---|---|
| (a) கொலையே, களவே, காமத்தீ விழைவு | 1. உள்ளம் தன்னில் தோன்றுவன |
| (b) பொய்யே, குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் | 2. என்பது இயல்பே |
| (c) வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி | 3. உடம்பில் தோன்றுவன |
| (d) பிறந்தார், மூத்தார், பிணி நோயுற்றார், இறந்தார் | 4. சொல்லில் தோன்றுவன |

(A) 3 2 1 4 (B) 3 4 1 2 (C) 3 1 2 4 (D) 3 2 4 1

பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்கு கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
| --- | --- |
| (a) தஞ்சை ஆபிராகம் பண்டிதர் | 1. தண்ணீர், தண்ணீர் |
| (b) வி.கோ. சூரியநாராயண சாத்திரியார் | 2. இசைநூல் |
| (c) கோமல் சுவாமிநாதன் | 3. கருணாமிர்த சாகரம் |
| (d) முதுநாரை | 4. மானவிஜயம் |

(A) 4 3 2 1 (B) 2 4 3 1 (C) 3 4 1 2 (D) 1 2 4 3

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் பாடப்பட்ட மன்னன்
(A) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
(B) பல்யானை செல்கெழுகுட்டுவன்
(C) செல்வக்கடுங்கோ வாழியாதன்
(D) கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

'முத்தொள்ளாயிரம்' பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைக் கட்டுக

(A) முத்தொள்ளாயிரப் பாடல்களில் 'புறத்திரட்டு' என்னும் நூலின் வாயிலாக 108 வெண்பாக்கள் மட்டுமே கிடைத்துள்ளன

(B) பழைய உரைநூல்களில் மேற்கோளாக 22 பாடல்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன

(C) பழந்தமிழர் பண்பாடு, தமிழக மூவேந்தர்கள், அவர்தம் படைகள், வீரர்கள், போரியல் முறைகள் சொல்லப்பட்டுள்ளன

(D) சுவை மிகுந்த விருத்தப்பாக்கள் கற்பனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றன

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பட்டியல் ஒன்றுடன், பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்கு கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க:

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| (a) நீள்நெடுங்கண்ணி | 1. கட்கநேத்ரி |
| (b) வாள்நெடுங்கண்ணி | 2. விசாலாட்சி |
| (c) பழமலைநாதர் | 3. சொர்ணபுரீச்சுரர் |
| (d) செம்பொன் பள்ளியார் | 4. விருத்தகிரீசுவரர் |

(A) 3 4 2 1 (B) 1 2 3 4 (C) 2 1 4 3 (D) 4 3 2 1

சாகித்திய அகாடமி பரிசுபெற்ற ரா.பி. சேதுப்பிள்ளையின் நூல் எது?

(A) கள்ளர் சரித்திரம்

(B) தமிழ் இலக்கிய வரலாறு

(C) தமிழின்பம்

(D) முத்தொள்ளாயிர விளக்கம்

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர்

(A) திலகவதி (B) நீலாம்பிகை

(C) சிவகாமி (D) புனிதவதி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

விடைத் தேர்க: 'தமிழகத்தின் வேர்ட்ஸ்வர்த்' என்று பாராட்டப்படுபவர் யார்?

(A) சுரதா

(B) அப்துல் ரகுமான்

(C) வாணிதாசன்

(D) தாரா பாரதி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

தமிழார்வத்தின் காரணமாகத் தம் பெயரை 'பரிதிமாற்கலைஞர்' என மாற்றி அமைத்துக் கொண்டவர்

(A) மறைமலையடிகள்

(B) சூரியநாராயண சாஸ்திரி

(C) ரா. இராகவையங்கார்

(D) சிங்கார வேலு முதலியார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

கீழ்க்காணும் கூற்றுகளில் பொருத்தமற்றதைத் தேர்வு செய்க

(A) தந்தை பெரியார் 'பகுத்தறிவாளர் சங்கத்தை' நிறுவினார்

(B) பெரியார் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்

(C) பெரியார் மகாத்மா காந்தியின் தொண்டர் ஆனார்

(D) ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று மூன்றரை ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பொருத்துக:

| ஆசிரியர் | சிறுகதை |
|---|---|
| (a) வ.வே.சு. ஐயர் | 1. பஞ்ச தந்திரக் கதைகள் |
| (b) தாண்டவராய முதலியார் | 2. மங்கையர்கரசியின் காதல் |
| (c) செல்வ கேசவராய முதலியார் | 3. காணாமலே காதல் |
| (d) கு.ப.ரா. | 4. அபிநயக் கதைகள் |

(A) 1 2 4 3 (B) 2 4 3 1 (C) 3 1 2 4 (D) 2 1 4 3

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பொருந்தா இணையைக் கண்டறிக:

| | | |
|---|---|---|
| (A) பொதுவுடைமை | – | புதுமைப்பித்தன் |
| (B) தனித்தமிழ் | – | மறைமலை அடிகள் |
| (C) பேச்சுக் கலை | – | பேரறிஞர் அண்ணா |
| (D) புரட்சி | – | பாரதிதாசன் |

துய்ப்பலே ஆட்சியில் ஆகுநர் மாளிகைக்குள் பல்கைகினில் செல்லும் உரிமை பாருக்கு வழங்கப்பட்டது?

(A) வீரராகவர் (B) ஆனந்த ரங்கர்

(C) பரஞ்சோதி முனிவர் (D) தருமி

We Shine Academy® SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

புகைப்பழக்கதைக் கதைக்கருவாகக் கொண்டு 'மெல்ல மெல்ல மற' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

(A) இலட்சுமி (B) சுஜாதா (C) சுபா (D) தாமரை

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

அரசு யாருடைய பிறந்தநாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது?

(A) மு. வரதராசனார்

(B) பாரதியார்

(C) காமராசர்

(D) அண்ணா

'மண நூல்' இந்நூலின் ஆசிரியர் யார்?

(A) இளங்கோவடிகள்

(B) சீத்தலைச் சாத்தனார்

(C) திருத்தக்க தேவர்

(D) திருவள்ளுவர்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பொருத்துக:

(a) அம்பை — 1. வலம்புரி

(b) அனுராதா ரமணன் — 2. காளி

(c) திலகவதி — 3. காலச் சுமைதாங்கி

(d) பாக்யா — 4. வீட்டின் மூலையில் ஒரு சமயலறை

(A) 4 3 2 1 (B) 1 2 3 4 (C) 1 2 4 3 (D) 4 3 1 2

அடிகோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்புத் தருக. அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகிறது.

(A) பெயரெச்சம் (B) வினையெச்சம்

(C) முற்றெச்சம் (D) ஒரு பொருட் பன்மொழி

தைத்திங்கள் என்பது —————— பெயரைக் குறிக்கும்.

(A) இடப்பெயர்
(B) மாதப்பெயர்
(C) காலப்பெயர்
(D) பொருட்பெயர்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

சொற்களை ஒழுங்குபடுத்துக.

"ஆற்றல் நிரம்பிய சொற்கள் கவிதை தாமாகப் பொங்கி வழிவதுதான்"

(A) தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை ஆற்றல் நிரம்பிய சொற்கள்

(B) ஆற்றல் நிரம்பிய கவிதை சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான்

(C) ஆற்றல் கவிதை நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான்

(D) ஆற்றல் நிரம்பிய சொற்கள் தாமாகப் பொங்கி வழிவதுதான் கவிதை

சொற்களை ஒழுங்குபடுத்துக.

வியனகர் குறைபடாக் கொளக் கூழுடை கொளக்

(A) கொளக் கொளக் கூழுடை வியனகர் குறைபடாக்

(B) கூழுடை வியனகர் குறைபடாக் கொளக்கொளக்

(C) கொளக் கூழுடைய வியனகர் கொளக் குறைபடக்

(D) கொளக் கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்

கீழ்க்காணும் சொற்களை அகர வரிசைபடுத்து
சுற்றம் சீர்தூக்கு சிந்தனை சாட்டை சங்கு
(A) சீர்தூக்கு, சங்கு, சிந்தனை, சாட்டை, சுற்றம்
(B) சிந்தனை சீர்தூக்கு சங்கு சுற்றம் சாட்டை
(C) சாட்டை சுற்றம் சீர்தூக்கு சிந்தனை சங்கு
(D) சங்கு சாட்டை சிந்தனை சீர்தூக்கு சுற்றம்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

ஒலி வேறுபாடு அறிந்து சரியான பொருளை அறிக.

நாட்டுக்குத் தேவை –

(A) அரன் (B) அறன் (C) அறண் (D) அரண்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

வாலை, வாழை, வாளை ஒலி வேறுபாடறிந்து பொருள் தருக.

(A) மீன்வகை, மரவகை, இளம்பெண்

(B) இளம்பெண், மரவகை, மீன்வகை

(C) இளம்பெண், மீன்வகை, மரவகை

(D) மரவகை, மீன்வகை, இளம்பெண்

ஆங்கில சொல்லுக்கு இணையான தமிழ் சொல்லை தேர்வு செய்க?

"இன்கம் டேக்ஸ் ஆஃபீஸ்" "Incometax office"

(A) வருமானத் துறை அலுவலகம்

(B) வருமான வரி அலுவலகம்

(C) வருமான அலுவலகம்

(D) வருவாய் அலுவலகம்

வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

I. வலது பக்கம் சுவறில் எழுதாதே

II. வலப் பக்கச் சுவரில் எழுதாதே

III. வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே

IV. வலப்பக்கச் சுவறில் எழுதாதே

(A) IV (B) I (C) II (D) III

அணித்து – எதிர்ச்சொல்லைக் கண்டறிக.

(A) தொலைவில் (B) உய்த்து

(C) கொடுத்து (D) அளத்தல்

We Shine Academy® SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM


Good Night!
Take Care of Your Health ❤️
Study Well for Your Goals 📚
Thank You for Joining 👍
STUDY